DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.3

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.ராமசாமி | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of November, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது வெம்பக்கோட்டை தாலுகா விஜயகரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி என் மகன். எனக்கு 4 மகன்கள் உள்ளனர். ஆஜர் எதிரிக்கு திருமணம் ஆகிவிட்டது. ஆஜர் எதிரிக்கு காயத்ரி என்பவருடன் காதலித்து பெரியவர்கள் பேசி முடிவு செய்து திருமணம் முடிந்தது. வழக்கில் இறந்துபோனவர்கள் எனது மருமகள் காயத்ரியும், பேரன் கோபாலரக்ஷன் ஆகியோர் ஆவர். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இதற்கு முன்பு இந்த வழக்கு தொடர்பாக சாத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்றேன், அங்கு நடுவரிடம் சம்பவம் குறித்து ரகசிய வாக்குமூலம் அளித்தேன். அந்த ரகசிய வாக்குமூலம் அ.த.சா.ஆ.2 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி

அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை)</u>

போலீஸார் விசாரணையில் ஆஜர் எதிரி கொரோனா காலத்திலிருந்து வேலைக்கு செல்லவில்லை என்றும், என் மகனும், மருமகளும் கூட்டுக்குடுத்தனமாக எங்களுடன் இருந்துவந்த நிலையில் தனிக்குடித்தமாக இருந்தால்திருந்தி வேலைக்கு போவான் என்று நினைத்து வீட்டின் அருகிலேயே ரூபாய் 50,000 க்கு ஒத்திக்கு பிடித்து அதில் தனிக்குடித்தனம் வைத்தேன் என்றும், அதிலிருந்து எனக்கும், என் மகனுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும், என் மகன் அடிக்கடி என்னிடமும், என் மனைவியிடமும், மற்றொரு மகன் பசும்பொன்னிடமும் தகராறு செய்வதால் நாங்கள் யாரும் ஆஜர் எதிரியிடம் பேசமாட்டோம் என்றும், என் மனைவி மட்டும் பேசிக்கொள்வார் என்றும், இந்நிலையில் என் மருமகள் குழந்தை பெற்று அவரது அப்பா வீட்டில் இருந்தவரை எங்கள் ஊர் கும்பாபிஷேகத்திற்கு வரவழைத்து எங்களுடன் தங்கவைத்துக்கொண்டோம் என்றும், ஆஜர் எதிரியும் என் மருமகளும் எங்கள் வீட்டு மாடியில் தான் தங்கியிருந்தனர் என்றும், குழந்தை பெற்றுவிட்டதால் என் மருமகளும் வேலைக்கு போகவில்லை என்றும், இரண்டு பேரும் வேலைக்கு போகாமல் என் சம்மந்தகாரர் என் மருமகளுக்கு சீதனமாக போட்டிருந்த நகைகளை ஆஜர் எதிரிகயான என் மகன் அடகு வைத்து செலவழித்துவிட்டான் என்றும், இது சம்மந்தமாக எனது மகனும, மருமகளுக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது என்றும், அப்போதெல்லாம் நானும், என் மற்றொருமகன் முத்துராமலிங்கமும் என் மருமகளின் அப்பாவிற்கு போன் போட்டு தகவல் சொல்லி அவர் வந்த சத்தம் போட்டு சமாதனப்படுத்திவிட்டு செல்வார் என்றும், இந்நிலையில் 25.05.2022 ம் தேதி அதிகாலையில் நானும், என் மனைவியும் தோட்டத்திற்கு போய்விட்டு என் மகன் பசும்பொன் வந்தவுடன் கத்திரிக்காய்

மூட்டையை ஏற்றிவிட்டுவிட்டு, பட்டாசு தொழிற்சாலைக்கு வேலைக்கு போய்விட்டேன் என்றும், என் மனைவி வீட்டிற்கு போய்விட்டார் என்றும், 11.00 மணியளவில் என் மகன் பசும்பொன்னும், என் மனைவியும் எனக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு ஆபிஸிற்கு வந்தனர் என்றும், பின்னர் என் மகன் மதியம் வரை என்னுடன் வேலை பார்த்துவிட்டு 01.00 மணிக்கு வீட்டிற்கு போய்விட்டான் என்றும், மாலை 06.00 மணிக்கு என் மகன் பசும்பொன் அனுப்பியதாக இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு பையன் என்னை அவசரமாக வீட்டிற்கு அழைத்துச்சென்றான் என்றும், வீட்டிற்கு வந்தபோது வீட்டு மாடியில் கூட்டமாக இருந்தது என்றும், மேலே போய் பார்த்தபோது என் மருமகள் கட்டிலுக்கு கீழே இறந்துகிடந்தார் என்றும், என் பேரன் கட்டிலுக்கு மேலே இறந்துகிடந்தார் என்றும், என் மகன் கொத்தாளமுத்துவை காணவில்லை என்றும் , என் மகன் பசும்பொன்னிடம் என்ன நடந்தது என்று கேட்டபோது மதியம் 03.30 மணிக்கு கொத்தாளமுத்து கீழே வந்து வண்டிச்சாவியை எடுத்துக்கொண்டு தன்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு பின்னர் வண்டியை எடுத்துச்சென்றார் என்று சொன்னதாகவும், மேலும் கீழ்வீட்டில் எனது மகன் பசும்பொன் படுத்திருந்தபோது சாயங்காலம் 06.00 மணிக்கு கேபிள் டிவி மாட்டுவதற்கு கொத்தாளமுத்து குடியிருந்த வீட்டுச்சாவியை கேட்டு கேபிள்டிவி ஆப்ரேடர் வந்தார் என்றும், கீழ் வீட்டில் சாவியை தேடிப்பார்த்தபோது கிடைக்கவில்லை என்றும், மாடியில் இருக்கும் என்று நினைத்து மாடிக்கு சென்றபோது மதினி காயத்ரியும், கோகுலரக்ஸனும் படுத்திருந்தார்கள் என்றும், மதினியை எழுப்பி கேட்கலாம் என்று நினைத்து மதியின் கையை தொட்டு எழுப்பநினைத்தபோது மதினியின் கை விறைத்திருந்தது என்றும், கோகுலரக்ஸனை அசச்சுப்பார்த்தபோது அவனும் எந்த வித அசைவும் இல்லாமல் இருந்ததால் அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்று எண்ணி வேகமாக கீழே வந்து வீட்டின் முன்பு

கூட்டி பெருக்கிக்கொண்டிருந்த அம்மாவை சத்தம்போட்டு விவரத்தை சொன்னதும், அதை கேட்டு பெரியப்பா பாலசுப்பிரமணியன், பெரியம்மாள் தவிட்டம்மாள் ஆகிய அனைவரும் பதறிக்கொண்டு மேலே சென்றார்கள் என்றும், அவர்கள் சத்தத்தைகேட்டு ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள் என்றும், என் மகன் பசும்பொன், வெள்ளைச்சாமி மகன் அஜித்குமாருக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், என்னிடம் தெரிவித்ததாகவும், பின்னர் தகவல் தெரிந்து வெம்பக்கோட்டை காவல்துறையினர் வீட்டிற்கு வந்தனர் என்றும், இரவு 07.00 மணிக்கு காயத்ரியின் தம்பி, அப்பா, உறவினர்கள் வந்தார்கள் என்றும், காயத்ரியின் அப்பா வெள்ளைச்சாமி வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததன் அடிப்படையில் தனியார் ஆம்புலன்ஸ்மூலம் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது என்றும், இது சம்மந்தமாக போலீஸார் என்னை விஜயகரிசல் குளத்தில் வைத்து விசாரித்தபோது நான் என் மகன் கொத்தாளமுத்துவுடன் பேசியே பல வருடங்கள் ஆகிறது, என் மகன் கொத்தாளமுத்து, என் மருமகளுடன் அடிக்கடி சண்டை போட்டு அடிப்பான், நாங்கள் கேட்கப்போனால் எங்களையும் அடிக்கப்போவான். வீட்டில் இருக்கும் சாமான்களை போட்டு உடைப்பான். அதனால் நாங்கள் எதுவும் பேசமாட்டோம் என்றும், ஒருவாரத்திற்கு முன்பு கொத்தாளமுத்து காயத்ரியை சண்டைபோட்டு அடித்தபோது காயத்ரி என் மகனின் டார்சர் தாங்க முடியாமல் என் பேரனை வீட்டில் போட்டுவிட்டு ரோட்டிற்கு ஓடிவிட்டார் என்றும், அதன்பின் என் மனைவி தான் காயத்ரியின் மகனை காயத்ரியிடம் கொடுத்து, அருகாமையில் வசிக்கும் துர்கேஷ்வரி என்பவர் அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்று வைத்துக்கொணடார் என்றும், பின்னர் என் மனைவி காயத்ரியை சமாதனப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தார்ள ன்றும், எனவே பல்வேறு பிரச்சனையின் காரணமாக என் மகன் கொத்தாளமுத்து தான்

என்பேரனையும், என் மருமகளையும் ஏதோ செய்துவிட்டான் என்றும், அவர்கள் இறப்பிற்கு என் மகன் கொத்தாளமுத்து தான் காரணம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.4

(Accused present)

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.முத்துராமலிங்கம் | Caste | : |
| Father's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of November, 2024.

முதல் விசாரணை

நான் தற்போது வெம்பக்கோட்டை தாலுகா விஜயகரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். அ.சா.3 என் தந்தை. ஆஜர் எதிரி என் உடன்பிறந்த அண்ணன். வழக்கில் இறந்துபோனவர்கள் என் மதினி காயத்ரியும், மகன் கோகுல்ரக்ஷனும் ஆவர். சம்பவத்தின் போது நானும், ஆஜர் எதிரியும் எனது பெற்றோர்களுடன் என் மதினியும் எங்கள் வீட்டின் கூட்டுக்குடித்தனமாக வசித்து வந்தோம். மேல்வீட்டில் ஆஜர் எதிரியும், என் மதினியும், கீழ் வீட்டில் நானும், என் பெற்றோர்களும் வசித்து வந்தோம். சுமார் 2 வருடத்திற்கு முன்பு வீட்டில் நிறைய கூட்டம் சேர்ந்தது. நான் மேலே போய் பார்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. இதற்கு முன்பு இந்த வழக்கு தொடர்பாக சாத்தூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு சென்றேன், அங்கு நடுவரிடம் சம்பவம் குறித்து ரகசிய வாக்குமூலம் அளித்தேன். அந்த ரகசிய வாக்குமூலம் அ.த.சா.ஆ.3 ஆகும். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை)</u>

போலீஸார் விசாரணையில் ஆஜர் எதிரி கொரோனா காலத்திலிருந்து வேலைக்கு செல்லவில்லை என்றும், என் அண்ணனும், மதினியும் கூட்டுக்குடுத்தனமாக எங்களுடன் இருந்துவந்த நிலையில் தனிக்குடித்தமாக இருந்தால் திருந்தி வேலைக்கு போவான் என்று நினைத்து என்அப்பா வீட்டின் அருகிலேயே ரூபாய் 50,000 க்கு ஒத்திக்கு பிடித்து அதில் தனிக்குடித்தனம் வைத்தார் என்றும், அதிலிருந்து எனது அப்பாவிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என்றும், ஆஜர் எதிரி என் பெற்றோரிடமும் என்னிடமும் அடிக்கடி தகராறு செய்வதால் நாங்கள் யாரும் ஆஜர் எதிரியிடம் பேசமாட்டோம் என்றும், என் அம்மா மட்டும் பேசிக்கொள்வார் என்றும், இந்நிலையில் என் மதினி குழந்தை பெற்று அவரது அப்பா வீட்டில் இருந்தவரை எங்கள் ஊர் கும்பாபிஷேகத்திற்கு வரவழைத்து எங்களுடன் தங்க வைத்துக்கொண்டோம் என்றும், ஆஜர் எதிரியும் என் மதினியும் எங்கள் வீட்டு மாடியில் தான் தங்கியிருந்தனர் என்றும், குழந்தை பெற்றுவிட்டதால் என் மதினி வேலைக்கு போகவில்லை என்றும், இரண்டு பேரும் வேலைக்கு போகாமல் என் மதினியின் அப்பா என் மதினிக்கு சீதனமாக போட்டிருந்த நகைகளை ஆஜர் எதிரகயான என் அண்ணன் அடகு வைத்து செலவழித்துவிட்டான் என்றும், இது சம்மந்தமாக எனது அண்ணனுக்கும், மதினிக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்பட்டது என்றும், அப்போதெல்லாம் நானும், எனதுஅப்பாவும், என் மதினியின் அப்பாவிற்கு போன் போட்டு தகவல் சொல்லி அவர் வந்து சத்தம் போட்டு சமாதனப்படுத்திவிட்டு செல்வார் என்றும், இந்நிலையில் 25.05.2022 ம் தேதி அதிகாலையில் என் பெற்றோர்கள் தோட்டத்திற்கு போய்விட்டு, நான் தோட்டத்திற்கு சென்றவுடன் கத்திரிக்காய் மூட்டையை ஏற்றிவிட்டுவிட்டு, பட்டாசுதொழிற்சாலைக்கு என் அப்பா

வேலைக்கு போய்விட்டார் என்றும், என் அம்மா வீட்டிற்கு போய்விட்டார் என்றும், 11.00 மணியளவில் நானும், என் அம்மாவும், என் அப்பாவுக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு ஆபிஸிற்கு சென்றோம் என்றும், பின்னர் நான் மதியம் வரை என் அப்பாவுடன் வேலை பார்த்துவிட்டு 01.00 மணிக்கு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், நான் வீட்டில் இருந்தபோது மதியம் 03.30 மணிக்கு கொத்தாளமுத்து கீழே வந்து வண்டிச்சாவியை எடுத்துக்கொண்டு என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு பின்னர் வண்டியை எடுத்துச்சென்றார் என்றும், அந்நேரம் கீழ்வீட்டில் நான் படுத்திருந்தபோது சாயங்காலம் 06.00 மணிக்கு கேபிள் டிவி மாட்டுவதற்கு ஆஜர் எதிரி கொத்தாளமுத்து குடியிருந்த வீட்டுச்சாவியை கேட்டு கேபிள்டிவி ஆப்ரேடர் வந்தார் என்றும், கீழ் வீட்டில் சாவியை தேடிப்பார்த்தபோது கிடைக்கவில்லை என்றும், மாடியில் இருக்கும் என்று நினைத்து மாடிக்கு சென்றபோது மதினி காயத்ரியும், கோகுலரக்ஸனும் படுத்திருந்தார்கள் என்றும், மதினியை எழுப்பி கேட்கலாம் என்று நினைத்து மதியின் கையை தொட்டு எழுப்பநினைத்தபோது மதினியின் கை விறைத்திருந்தது என்றும், கோகுலரக்ஸனை அசச்சுப்பார்த்தபோது அவனும் எந்த வித அசைவும் இல்லாமல் இருந்ததால் அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள் என்று எண்ணி வேகமாக கீழே வந்து வீட்டின் முன்பு கூட்டி பெருக்கிக்கொண்டிருந்த அம்மாவை சத்தம்போட்டுவிவரத்தை சொன்னதும், அதை கேட்டு பெரியப்பா பாலசுப்பிரமணியன், பெரியம்மாள் தவிட்டம்மாள் ஆகிய அனைவரும் பதறிக்கொண்டு மேலே சென்றார்கள் என்றும், அவர்கள் சத்தத்தைகேட்டு ஊர்காரர்கள் கூடிவிட்டார்கள் என்றும், நான் உடனே வெள்ளைச்சாமி மகன் அஜித்குமாருக்கு போன் செய்து தகவல் சொன்னேன் என்றும், பின்னர் தகவல் தெரிந்து வெம்பக்கோட்டை காவல்துறையினர் வீட்டிற்கு வந்தனர் என்றும், இரவு 07.00 மணிக்கு காயத்ரியின் தம்பி, அப்பா, உறவினர்கள் வந்தார்கள் என்றும், காயத்ரியின் அப்பா வெள்ளைச்சாமி வெம்பக்கோட்டை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததன் அடிப்படையில் தனியார்

ஆம்புலன்ஸ் மூலம் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டது என்றும், இது சம்மந்தமாக போலீஸார் என்னை விஜயகரிசல் குளத்தில் வைத்து விசாரித்தபோது நான் என் அண்ணன் கொத்தாளமுத்துவுடன் பேசியே பல வருடங்கள் ஆகிறது, என் அண்ணன் கொத்தாளமுத்து, என் மதினியுடன் அடிக்கடி சண்டை போட்டு அடிப்பான், நாங்கள் கேட்கப்போனால் எங்களையும் அடிக்கப்போவான். வீட்டில் இருக்கும் சாமான்களை போட்டு உடைப்பான். அதனால் நாங்கள் எதுவும் பேசமாட்டோம் என்றும், ஒருவாரத்திற்கு முன்பு கொத்தாளமுத்து காயத்ரியை சண்டைபோட்டு அடித்தபோது காயத்ரி என் அண்ணனின் டார்சர் தாங்க முடியாமல் தன் மகனை வீட்டில் போட்டுவிட்டு ரோட்டிற்கு ஓடிவிட்டார் என்றும், அதன்பின் என் அம்மா தான் காயத்ரியின் மகனை காயத்ரியிடம் கொடுத்து, அருகாமையில் வசிக்கும் துர்கேஷ்வரி என்பவர் அவரது வீட்டிற்கு அழைத்துச்சென்று வைத்துக்கொணடார் என்றும், பின்னர் என் அம்மா, காயத்ரியை சமாதனப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வந்தார்ள ன்றும், எனவே பல்வேறு பிரச்சனையின் காரணமாக என் அண்ணன் கொத்தாளமுத்து தான் தன் மகனையும், என் மனைவியையும் ஏதோ செய்துவிட்டான் என்றும், அவர்கள் இறப்பிற்கு என் அண்ணன் கொத்தாளமுத்து தான் காரணம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரி என் அண்ணன் என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை–இல்லை</u>